www.tamilarangam.net

# இவர்களுமா துரோகிகள் ?

தீப்பொறி அமைப்பைத் தாபித்தவர்களில் ஒருவரான கேசவன் உட்பட மொத்தம் 10 பேர் அண்மையில் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர். மே17நள்ளிரவு சீருடையிலும், ஆயுதபாணிகளாகவும் காணப்பட்ட புலிகள் கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து கேசவனைக் 'கைது' செய்தனர். இதைத் தொடர்ந்து மே21 நள்ளிரவு மீரா உட்பட 4 பெண்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களான சிறிநிவாசன்(கலைப்பீடம்2ம் வருடம்), கோவிந்தராஜன்(கலைப்பீடம் 3ஆம் வருடம்) ஆகியோரும், இன்னும் 2 மாணவர்களும்(பெயர் தெரியவில்லை) புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர். மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த கோவிந்தன் என்பவரும் புலிகளால் 'கைது' செய்யப்பட்டுள்ளார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கரான கேசவன்(நோபேட், கோவிந்தன், டொமினிக் என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டவர்) மலையகத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். 70களில் கலை, இலக்கியப் பத்திரிகைத்துறையில் உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை "தீர்த்தக்கரை" எனும் பத்திரிகையில் எழுதியவர். 80களில் புளொட் அமைப்பில் இணைந்துகொண்டு உழைத்தவர். தளப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். பின்னர் புளொட்டின் உட்கட்சி அராஜகம், படுகொலைகளினால் வெளியேறி "தீப்பொறி" அமைப்பினைத் தாபித்தவர். புகழ்பெற்ற "புதியதோர் உலகம்" நாவலையும் இக்காலப் பகுதியிலேயே எழுதினார்.

இவர்களைக் கைது செய்யும்போது "எங்களை மீறி வேலை செய்யக்கூடிய எவரையும் நாம் விட்டுவைக்க மாட்டோம். தீப்பொறியை முக்கியமான சக்திகளில் ஒன்றாகக்கருதுகிறோம். எனவே உங்களைக் கைது செய்கிறோம்" எனப் புலிகள் கூறியுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்த பின்னர் பல்கலைக்கழகத்தில் புலிகள் கூட்டமொன்றை கூட்டினர். அங்கு பேசிய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான' மாணவர்கள் மீது பொய்க்குற்றச்சாட்டுகள் பலவற்றைக் கூறினார். பின்னர் கூட்ட முடிவில் "கைதானவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்?" என மாணவர்களைக் கேட்டார். நீண்ட நேர மௌனத்தின் பின் மாணவர் ஒருவர் துணிச்சலுடன் எழுந்து "இவர்களை மன்னித்துவிட முடியாதா?" எனக் கேட்டார். இதற்கு எதுவித பதிலுமில்லாமலேயே கூட்டம் முடிக்கப்பட்டது.

இக் 'கைது' பற்றி தமது பத்திரிகையில் எழுதிய புலிகள் 'பிடிபட்டவர்கள் – புளொட் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்கள்' என அப்பட்டமாகப் பொய்க் காரணம் காட்டியுள்ளனர். புலிகளால் புளொட் தடைசெய்யப்படு முன்னரே புளொட்டின் அராஜகப் போக்குகளால் அதிலிருந்து வெளியேறியவர் கேசவன். புளொட்டுக்கு தலைமறைவாக இருந்துகொண்டே 85 முற்பகுதியில் புளொட் மீதான மாயையுள் இருந்த மக்கள் மத்தியில் அதன் அராஜகப்போக்கை அம்பலப்படுத்தும் கடினமான முயற்சியில் ஈடுபட்டவர். "தீப்பொறி" பத்திரிகை 2 இதழ்களூடாகவும், "புதியதோர் உலகம்" நாவல் மூலமும் புளொட்டின் அராஜகப்போக்கை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். இதை மக்களும் அறிவர். புலிகளும் அறிவர். இப்படியிருக்க இவர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவரென காரணம் கற்பிப்பது விசமத்தனமானது. தமது உள்நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப்படுத்துகின்ற முயற்சி.

யூனில் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இன்றுவரை என்.எல்.எவ்.ரி, பேரவை, பி.எல்எவ்.ரி, தீப்பொறி அமைப்புகளைச் சார்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும், மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியிருந்தவர்கள், எதுவுமே அறியாதவர்கள்... என எல்லோருமாக சுமார் 200க்கு மேற்பட்டோரும் புலிகளால் கடத்தப்பட்டு 'காணாமற்' போயுள்ளனர். யாழ் பல்கலைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொலையிலிருந்து இன்றைய 'கைதிகள்' வரை பிடிபட்ட/கொல்லப்பட்ட எவருமே இலங்கை/இந்திய அரசுகளுக்கு சார்பானவர்கள் அல்ல என்பதும், எவ்வகையிலும் 'துரோகிகள்' எனப் பட்டம் சூட்டமுடியாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பது இவர்களது பெற்றோர், உறவினர்களுக்குக்கூட தெரியவருவதில்லை.

இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கையரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாயக மறுப்பு, மற்ற இயக்கங்களின் அட்டகாசம் என்பவற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள். விடுதலையை நேசித்தார்கள்.

இதுதான் இவர்கள் செய்த குற்றமா?

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மை விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளன என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்குப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோலி வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டியுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்துகொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்.

— நண்பர்கள் (ஈழம் )

"... உண்மை என்றால் என்ன? நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்புத்தான் எக்காலத்திற்கும் பொருத்தமான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஏக உண்மையா? அப்படியில்லை. உண்மை சார்பு நிலையானது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப உண்மை புதிது புதிதாக வரும். ஒரு காலத்தில் பூமி தட்டையாக இருந்ததென்ற கருத்து அக்காலத்தில் உண்மை மாத்திரமே. இன்றைய உண்மை பூமி உருண்டை என்பதே. நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்பு உங்கள் அளவில் மட்டுமே உண்மை. இந்த அடிப்படையில் பிரச்சினையை ஆராய கற்றுக்கொள்ளுங்கள். நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் விவகாரம் உங்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்குட்பட்டதாகக் குறுக்கிவிடாதீர்கள். இது அரசியல் விவகாரம். முழு மக்களின் விவகாரம். இதில் விரிவான பார்வை அவசியம்.....

("புதியதோர் உலகம்" நாவல். பக்கம்: 350, 351)

---

தயவுசெய்து இப் பிரசுரத்தை உங்கள் நண்பர்களிடமும் பரவும்படி செய்யுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்